JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **82/2019** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 4** | Prosecution /Defence / Court | |
| Name | **Chinnasamy** | Village | Vaipadi road, Vijayamangalam |
| Father's Name | **Kolanthaisamy** | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 20.08.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். 2017 ம் வருடம் காலை 5.45 மணிக்கு நான் என் தோட்டம் போவதற்காக சேலம் to கோவை பைபாஸ் ரோட்டில் சென்ற போது கூட்டமாக இருந்த இடத்தில் நான் சென்று பார்த்த போது லாரி மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. என்னை பெருந்துறை காவல் நிலைய போலீசார் விசாரிக்க எனக்கு தெரிந்த விவரங்களை கூறினேன்.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

**1.** 18.01.2017 ம் தேதி காலை 5.45 மணி சுமாருக்கு வாய்ப்பாடி போக வேண்டி நான் எனது டிவிஎஸ் வண்டியில் போய்க் கொண்டிருந்த போது சேலம் to கோவை மெயின் ரோட்டில் வாகனங்கள் வந்ததால் சென்டர் மீடியன் பக்கம் நின்று விட்டேன் என்றால் சரியல்ல. ஈரோடு இரயில்வே காலனியைச் சேர்ந்த ஜோசப் ரோமன் மெலோனி என்பவர் star city motor cycle TN 37 BK 4479 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர

வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்க நோக்கி வந்ததை நான் பார்க்கவில்லை. அப்போது வாய்ப்பாடி ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி TN 33 AW 2689 என்ற பதிவு எண் கொண்ட லாரியை தாசம்பாளையத்தை சேர்ந்த மணி என்பவர் திடீரென்று அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மோட்டார் சைக்கிளில் வந்த நபர் மீது மோதி விட்டு லாரியை நிறுத்தாமல் சென்ற விட்டார் என்றால் சரியல்ல.

2. விபத்தில் லாரியின் டேங் உடைந்து தார் ரோட்டில் டீசல் சிந்தியை நான் பார்க்கவில்லை. இருசக்கர வாகனத்திதல் வந்த நபருக்கு நெற்றிக்கு மேல் தலையில் அடிபட்டு இரத்த காயம் ஏற்பட்டிருந்தது என்றால் சரியல்ல. ஆம்புலன்ஸிற்கு போன் செய்து ஆம்புலன்ஸ் வந்தவுடன் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த பின்னர் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் இறந்து விட்டதாக கேள்விபட்டேன் என்றால் சரியல்ல. போலீஸ் விசாரணையின் போது வாக்குமூலமாக நடந்த சம்பவத்தை கூறிவிட்டு தற்போது சம்பவம் நடந்தது எந்த தேதி என்று தெரியவில்லை என்றும், சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை